நம்முடைய நாட்டினுடைய பொருளாதார நலன் பறிக்கப்படுகிறது; பாதிக்கப்படுகிறது.

தனியார்மயப்படுத்தும் திட்டத்திலே, மக்கள் நலனைக் கருத்திலே கொண்டுதான் பேருந்துகளைக்கூட, அவை நட்டத்திலே இயங்கினாலும்கூட, மக்கள் நலனுக்காக அவற்றை நாம் தொடர்ந்து நடத்துகிறோம். அதேபோல், இந்த சேலம் இரும்பாலையையும், அதன் நட்டத்தைச் சரிகட்டுவதற்கான ஈடுபாட்டிலே நாம் இறங்குவதற்குப் பதிலாக, உலகமயமாக்குகிற அந்தக் கொள்கையின் அடிப்படையிலே, தனியார்மயமாக்கல் முறையிலே மத்திய அரசு ஈடுபடுவதை வன்மையாகக் கண்டித்து, இந்த மாமன்றத்தின் மூலமாக ஏகமனதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, எக்காரணத்தைக் கொண்டும் இதைத் தனியார் துறைக்கு தாரை வார்க்கக்கூடாது; தொடர்ந்து மக்கள் நலனைப் பாதுகாக்கின்ற வகையிலே, நம்முடைய தொழிலாளர்களாலேயேகூட அதை நடத்துவதற்கான வாய்ப்பு இருந்தால்கூட, அதையும் அரசு ஆலோசித்து, அது தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்து, தொடர்ந்து அது நம்முடைய ஆலையாக இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

***திரு. சி. வேலாயுதன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** நான் அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறையாக சேலம் இரும்பாலையைப் பெற்றவனுக்குள்ள கவலையைவிட, பொதுத் துறைகள் பலவற்றைத் தனியார் துறைக்கு விற்றுவிட்டவர்களுக்கு இருக்க முடியாது என்ற அந்தக் கருத்தை வெளியிட்டு, சில செய்திகளை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒன்று, தீர்மானமாக நிறைவேற்ற வேண்டுமென்று எல்லா உறுப்பினர்களுமே இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட தீர்மானம் முன்மொழியப் பட்டால், எவ்வளவு நேரம் எடுத்துக்கொண்டு, எவ்வளவு கருத்துக்கள் சொல்லப்பட வேண்டுமோ, அவ்வளவு கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே, ஒரு

தீர்மானம் நிறைவேறுவதற்கான சூழ்நிலை உருவாகி இருப்பதாகவே நான் கருதுகிறேன். இருந்தாலும், சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு-- இந்த அவையிலே உறுப்பினர்கள் நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே சொல்லப்பட்ட எல்லாக் கருத்துக்களும், சேலம் உருக்காலை, பொதுத் துறை வசமே இருக்க வேண்டும் என்பதுதான் மையக் கருத்து; சில பேர்களுடைய கருத்து — இரண்டு, மூன்று பேர் அங்கே இருப்பவர்களைப் பிடிக்காமல், கண்ணெரிச்சலால், அவர்கள் எல்லாம் இராஜிநாமா செய்ய வேண்டும் என்ற கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்துக்கு நான் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இருந்தாலும், ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தது அல்லது கவன ஈர்ப்பு அறிவிக்கை கொண்டு வந்ததே முரசொலி மாறனையும், ரங்கராஜன் குமாரமங்கலத்தையும், டி.ஆர். பாலுவையும் இராஜிநாமா செய்யச் சொல்லத்தான் என்கின்ற நிலையிலே கொண்டுவரப்பட்டதோ என்று பொதுமக்கள் சந்தேகப்படும்படியாக சில கருத்துக்கள் இங்கே வெளியிடப்பட்டிருக்கின்றன.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.(குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

முற்பகல் 11-50

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பொதுத் துறையைத் தனியார் துறைக்கு மாற்றுகின்ற ஒரு நிலை இப்போதல்ல; நரசிம்மராவ் அவர்களுடைய காலத்திலேயே ஏற்பட்ட ஒரு நிலை என்பதை எல்லோரும் அறிவார்கள். பிரதமர் நரசிம்மராவ் ஆட்சியிலே பொதுத் துறை நிறுவனங்கள்போல தனியார் துறைக்கு மாற்றப்பட்ட செய்திகளையெல்லாம் நாம் அறிந்திருக்கின்றோம். நான் வாதத்திற்காகச் சொல்லவில்லை. நான் யாரிடத்திலே கம்யூனிசம் படித்துக் கொண்டிருக்கின்றேனோ, யாரை கம்யூனிசத்திற்கு வழிகாட்டி என்று கருதிக் கொண்டிருக்கின்றேனோ, என்னுடைய தோழர் ஜோதிபாசு அவர்கள் ஆளுகின்ற மேற்கு

வங்கத்திலேயே, பொதுத் துறை நிறுவனங்கள், தனியார் துறைக்குத் தரப்படுகின்ற காட்சிகளையெல்லாம் காண்கின்றோம். இன்று மேற்குவங்கத் தலைநகரமான கல்கத்தாவில் மின்சார விநியோகமேகூட ஒரு தனியார் கம்பெனிக்குத் தரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அது சரியாக நடைபெறவில்லை, தனியாருக்குத் தரப்பட்ட பிறகு ஒழுங்காக மின்சாரம் வருகிறது; எரிசக்தி நல்லமுறையிலே பயன்படுகிறது என்கின்ற அளவிற்கு நல்ல பெயரையும் அங்கே பெற்றிருக்கின்றார்கள்.

தனியார் துறையா, பொதுத் துறையா என்கின்ற வாதத்திற்கு இப்போது நான் செல்லவில்லை. ஏனென்றால், இந்த நூற்றாண்டிலே தோன்றிய சோஷலிசம், இந்த நூற்றாண்டிலேயே ஒரு முடிவுக்கு வந்துவிட்ட ஒரு காட்சியை நாம் காண்கிறோம். அது வருந்தத்தக்கது தான். ஏழையினுடைய கண்ணீர் அறவே வற்றாத இந்தச் சூழ்நிலையில் சோஷலிசத்திற்கு அப்படிப்பட்ட ஒரு முடிவு ஏற்பட்டது நாமெல்லாம் எண்ணி வருந்தக்கூடிய ஒன்றாகும். இருந்தபோதிலும், இன்றுள்ள நிலையில் மத்தியிலே உள்ள அரசு, மாநில அரசைக் கலந்தாலோசித்து இந்த முடிவை எடுத்திருக்கலாம். ஆனால், இதை நான் ஒரு யோசனையாக, ஒரு கருத்தாகத்தான் சொல்ல முடியும். இருந்தாலும் நான் விரும்புகின்ற கூட்டாட்சித் தத்துவம் இன்னும் முற்றாக வந்தபாடில்லை. அதற்காகத்தான் நாம் போராடிக் கொண்டிருக்கிறோம்.

இங்கே பேசும்போது யாரோ குறிப்பிட்டார்கள், வெங்கட்ராமன் அவர்கள் இதற்காக நிரம்பப் பாடுபட்டார், சேலம் Steel Plant என்பதற்காகப் பாடுபட்டார் என்று சொன்னார்கள். ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, சேலத்தைப் பற்றி இதே அவையிலேதான் நானும் நம்முடைய பேராசிரியர் அவர்களும் எதிர்தரப்பிலேயிருந்து பேசுகின்ற அந்தக் காலகட்டத்தில், சேலம், சேலம் என்கிறீர்களே, சேலம் என்பது அமெரிக்காவில் உள்ள ஒரு ஊரே தவிர, அங்குள்ள இரும்புதான் நல்ல இரும்பே தவிர, இங்குள்ள கஞ்சமலை இரும்பு, சேர்வராயன்மலை இரும்பு எல்லாம் பயனுள்ள இரும்பு அல்ல என்று ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இதே அவையிலே பேசியிருப்பதை நான் மறந்துவிடவில்லை. அப்பொழுதுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுச்சி நாள் கொண்டாடி சேலம் இரும்புக்காக, அதைப் போலவே இன்னும் பல

திட்டங்களுக்காக, தென்னகத்திற்கு தரப்பட வேண்டிய திட்டங்களுக்காக

"சிந்திரி தொழில் சிறக்கிறது அங்கே
முந்திரித் தொழில் சிதைகிறது இங்கே"

என்றெல்லாம் வாசகங்களை அமைத்து, நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தி, பல திட்டங்களுக்காகப் போராடினார்கள். அதையொட்டி பல திட்டங்களை நாம் பெற்றிருக்கிறோம். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்றிருந்த நிலை மாறி இருப்பதை நாம் காண்கிறோம். அதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே இன்றைக்கு தெற்கு இல்லை. ஆனால், நம்முடைய நண்பர் ஞானசேகரன் தெற்கு இல்லை; ஆனால், தமிழகம் அப்படியாகிவிட்டது என்று சொன்னார். தமிழகம் தேய்ந்துவிட்டது என்று சொன்னார். அதைக்கூட, இன்னும் அடுக்குச் சொல்லில், தமிழகம் தாழ்ந்துவிட்டது என்று சொன்னால் ஞானசேகரனுடைய வாசகத்திற்கு பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். தமிழகம் ஒன்றும் தாழ்ந்துவிடவில்லை, ஞானசேகரன் போன்ற நல்ல நண்பர்கள் எல்லாம் இருக்கும்போது தமிழகம் தாழாது, தாழவிடமாட்டோம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இன்று ஆளுநர் உரையிலே இன்னும் பலர் உரையாற்ற வேண்டியிருக்கிறது. நாளையதினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றி, நான் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு சட்டமன்ற நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்படும். இந்தச் சூழ்நிலையில் நாம் இருக்கின்றோம். இவ்வளவு நேரம் பேசிய பிறகு இன்னொரு நாள் தீர்மானத்திற்காக செலவழிக்கத் தேவையில்லையென்று நான் கருதி, உங்கள் முன்னிலையில் இந்தத் தீர்மானத்தைப் படிக்கின்றேன். உங்கள் அத்தனை பேருடைய கருத்துக்கு ஏற்ப இப்போது நடைபெற்றதே ஒரு தீர்மானத்திற்காக நடைபெற்ற விவாதம் என்ற அளவில் அதைப் படிக்கின்றேன்.

"பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பொதுத் துறை நிருவாகத்தில் நடைபெற்று வருகின்ற சேலம் உருக்காலை நிருவாகம் தொடர்ந்து பொதுத் துறையிலேயே நடைபெறுவதற்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும், தனியாரிடம் ஒப்படைப்பதைத் தவிர்க்க வேண்டுமென்றும் இச்சட்டமன்றப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதற்கு எதிர்ப்பு உண்டா இல்லையா என்பதைத் தாங்கள்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

முற்பகல் 11-55

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* முதலமைச்சரின் தீர்மானம்...

*டாக்டர் தே. குமாரதாஸ்:* ஏகமனதாக என்பதைச் சேர்த்துக்கொள்ளலாம்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* இப்போதுதான் வாக்கெடுப்பிற்கு விடப்போகிறேனே, அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லையென்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

### தமிழ் இலக்கிய சங்கப் பலகையில் குறள் பீடம் அமைத்தல் குறித்து மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரின் அறிக்கை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அடுத்து, பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகின்றது.